DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Fast Track Magistrate, Srivilliputtur.

STC.No. 886-2024

Deposition of Witness for P.W.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | இசக்கிராஜ் | **தாலுகா** | : | சங்கரன்கோவில் |
| **த.பெ.** | : | ராஜேந்திரன் | **தொழில்** | : | Assistant Manager HDFC |
| **ஊர்** | : | பருவக்குடி | **வயது** | : | 32 |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 09.02.2026.

புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் HDFC வங்கி, தெற்கு வெங்காநல்லூர் கிளை மேலாளராக பணிபுரிகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்ற அழைப்பாணை வந்தது. நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை நான் எடுத்து வந்துள்ளேனா என்றால் ஆம். நான் எங்கள் வங்கியில் ஜெசிசாந்தாராணி பராமரித்து வரும் சேமிப்பு கணக்கு எண்.07751000011883-ன் 01.01.2020 முதல் 31.12.2024 வரைக்கான வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.1** ஆகும். பு.சா.ஆ.2 காசோலை எங்கள் வங்கி கிளையால் வழங்கப்பட்ட காசோலையின் சான்றிட்ட நகல் என்றால் சரி. பு.சா.ஆ.2 காசோலை எங்கள் வங்கிக்கு என்று வசூலுக்கு வந்ததாக சா.சா.ஆ.1 கணக்கு பட்டியலில் விபரம் உள்ளதா என்றால் காசோலை வசூலுக்கு வரவில்லை.

தற்போது நடைமுறையில் வசூலுக்கு தாக்கல் செய்யப்படும் காசோலை ஸ்கேன் செய்து அனுப்பப்படுவது வழக்கம் என்றால் சரி. காசோலை வழங்கப்பட்ட வங்கியிலேயே எந்த கிளையிலும் வசூலுக்கு தாக்கல் செய்தால் ஸ்கேன் செய்யமாட்டோம். வசூலுக்கு தாக்கல் செய்பவர் வேறு வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தால் ஸ்கேன் செய்து காசோலை வழங்கப்பட்ட வங்கிக்கு அனுப்பப்படுவது வழக்கம் என்றால் சரி. எங்கள் வங்கியில் காசோலையை ஸ்கேன் செய்து வசூலுக்கு அனுப்பும் விபரங்களை பராமரிப்பது வழக்கம் என்றால் சரி. பு.சா.ஆ.2 காசோவை வசூலுக்கு எங்கள் வங்கிக்கு வந்த விபரம் ஏன் சா.சா.ஆ.1 கணக்கு பட்டியலில் வரவில்லை என்றால் அந்த காசோலை வசூலுக்கு வந்திருந்தால் கணக்கு பட்டியலில் கண்டிப்பாக விபரம் வந்திருக்கும், காசோலை செலுத்துசீட்டில் வாடிக்கையாளர் வங்கி கணக்கு எண் தவறாக குறிப்பிட்டு இருந்தால் அப்போதே காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்பவரிடம் திரும்ப கொடுத்திருக்க வாய்ப்புண்டு.

எங்கள் வங்கி வாடிக்கையாளர் வழங்கும் காசோலை வாடிக்கையாளரால்வேறு நபருக்கு வழங்கப்பட்டு வாடிக்கையாளர் வங்கி கணக்கிற்கு வசூலுக்கு வரும் சமயம் நாங்கள் கொடுக்கும் விபரத்தை தான் வசூல் செய்யும் நபருக்கு அவரது வங்கி கணக்கின் விபரம் கொடுக்க இயலும் என்றால் சரி. 25.08.2023 தேதியன்று சா.சா.ஆ.1

கணக்கு பட்டியலில் அந்த குறிப்பு Credit interest Capitalized என உள்ளது வங்கி கணக்கை முடிக்கும்போது அந்த வாடிக்கையாளர் வங்கி கணக்கில் உள்ள இருப்பு தொகை வட்டியை அவர் இருப்பு தொகையுடன் சேர்த்ததைக் குறிக்கும் குறிப்பாகும். சா.சா.ஆ.1 கணக்கு பட்டியலின் படி அந்த வங்கி கணக்கை முடித்த சமயம் இருப்பு தொகை ரூ.2,510.17 பைசா இருந்தது. மேற்படி வங்கி கணக்கானது 19.02.2008 அன்று துவங்கப்பட்டுள்ளது. எங்கள் வங்கியில் வாடிக்கையாளர் வங்கி கணக்கில் பணம் எடுப்பதும் மற்றும் செலுத்துவது குறித்து பதிவுகள் தேதி, மணி மற்றும் நிமிடங்களுடன் பதிவது வழக்கம் என்றால் சரி.

சா.சா.ஆ.1 கணக்கு பட்டியலில் மேற்படி கணக்கு 25.08.2023 அன்று எத்தனை மணிக்கு முடிக்கப்பட்டதாக விபரம் இடம் பெற்றுள்ளதா என்றால் 25.08.2023 அன்று 14.55 மணியளவில் வாடிக்கையாளர் விண்ணப்பித்து உள்ளார். வாடிக்கையாளர் வங்கி கணக்கில் எந்த குறைபாடும் இல்லாமல் இருந்தால் கணக்கை முடிக்க விண்ணப்பத்த 30 நிமிடங்களில் நாங்கள் அவர் விண்ணப்பத்தை பரிசீலித்து வங்கி கணக்கை முடிப்போம். வாடிக்கையாளர் அவ்வாறு விண்ணப்பித்த பின் வாடிக்கையாளர் வழங்கிய காசோலை ஏதும் எங்கள் வங்கிக்கு வசூலுக்கு வந்தால் நாங்கள் வங்கி கணக்கு முடிக்கப்பட்டதாக குறிப்புடன் அந்த காசோலையை திருப்புவோம். அவ்வாறு காசோலை வங்கி கணக்கு முடிக்கப்பட்டதாக திருப்பப்பட்ட விபரம் அந்த வங்கி கணக்கிற்கான கணக்குப் பட்டியலில் இடம் பெறாது. அவ்வாறு வேறு வங்கிகளில் இருந்து காசோலைகள் வசூலுக்கு வரும் சமயம் வங்கி கணக்கு முடிக்கப்பட்டு இருந்தால் நாங்கள் வங்கி கணக்கு முடிக்கப்பட்டதாக கூறி காசோலையை திருப்பி விடுவோம்.

வங்கி கணக்கு முடிக்க விண்ணப்பித்திருந்த சமயத்தில் காசோலை ஏற்கனவே காசோலை வசூலுக்கு வந்திருந்து அந்த வாடிக்கையாளர் வங்கி கணக்கில் காசோலை தொகை இருப்பு இருந்தால் காசோலை பணமாக்கப்படும். இருப்பு இல்லாமல் இருந்தால் காசோலை திருப்பப்படும். வங்கியில் ஒவ்வொரு நாளும் வாடிக்கையாளரின் வங்கி கணக்கிற்கு பிற வங்கிகளில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்ட காசோலைகள் எங்கள் வங்கிக்கு வசூலுக்கு வருவதை தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பரிசிலணைக்கு எடுத்துக் கொள்வோம். எங்கள் வங்கிக்கு அவ்வாறு பரிசிலணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் மணி என்ன என்றால் எங்கள் வங்கி காசோலை என்றால் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை பரிசீலிப்போம். வேறு வங்கி காசோலை என்றால் காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை பரிசீலிப்போம். வேறு வங்கியில் இருந்து வசூலுக்கு வரும் காசோலைகளை 3 மணிக்குள் பரிசிலித்து விபரம் தெரிவிக்கவேண்டும் என அறிவுறுத்தல் உண்டு என்றால் சரி. 3 மணிக்கு மேல் வேறு வங்கியில் இருந்து வசூலுக்கு வரும் காசோலையை late clearing என குறிப்பிட்டு மறுநாள் பரிசீலிப்போம்.

பு.சா.ஆ.2 காசோலை எங்கள் வங்கிக்கு வந்த தினம் பிற்பகல் 3 மணிக்கு மேல் வசூலுக்கு வந்திருந்தால் நாங்கள் Late Clearing என அதனை மறுநாள்தான் பரிசிலணைக்கு எடுத்துக் கொள்வோம் என்றால் நாங்கள் பு.சா.ஆ.1 காசோலை HDFC காசோலை என்றால் அன்றே அதனை பரிசீலிப்போம்.

**குறுக்கு விசாரணை :**

நான் நீதிமன்றத்திற்கு எதிரியின் கணக்கு முடிக்கும் விண்ணப்பத்தின் நகல் நீதிமன்றத்திற்கு எடுத்து வந்துள்ளேன். அது **எ.சா.ஆ.1** ஆகும். எ.சா.ஆ.1 ஆவணத்தில்

RC

எதிரி அன்றைய தேதியில் தமிழில் கையொப்பம் செய்ததாக உள்ளது. நான் எதிரி எங்கள் வங்கியில் சமர்ப்பித்த கணக்கு துவங்கிய விண்ணப்பத்தை எடுத்து வரவில்லை. எ.சா.ஆ.1 ஆவணத்தில் எதிரி அவருடைய பெயரை ஜெசிசாந்தாராணி என எழுதி அதன் தொடர்ச்சியாக இனிஷியலை ஜே எனக் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரி. காசோலையில் வாடிக்கையாளர் மாதிரி கையொப்பத்தில் இருந்து வேறுபாடாக கையொப்பம் இடம் பெற்றிருந்தால் கையொப்பம் வேறுபட்டுள்ளது எனக் கூறி காசோலையை திருப்புவோம். வாடிக்கையாளர் வங்கி கணக்கை முடிக்க வரும்போது நாங்கள் வாடிக்கையாளரின் கைரேகை பதிவை பெற்றுக் கொண்டு அவர் அந்த கணக்கின் வாடிக்கையாளர் என்பதை உறுதி செய்து வங்கி கணக்கை முடிக்கும் விண்ணப்பத்தை நாங்கள் பரீசீலிப்போம்.

காசோலை வசூலுக்கு வரும் சமயம் காசோலையில் உள்ள கையொப்பத்தையும் நாங்கள் சரிபார்ப்போம் என்றாலும் கையொப்பம் வேறுபட்டால் அந்த காரணத்தையும் வேறு காரணத்தையும் குறிப்பிட்டு காசோலையை திருப்புவோம் என்றால் சரி. காசோலை திருப்பப்பட்டது குறித்து நாங்கள் ரெஜிஸ்ட்டர் மெயின்டேன் செய்வோம். அவ்வாறு திருப்பப்பட்ட விபரத்தை தெரிவிக்கும் விபரங்களின் அலுவலக நகல் நாங்கள் பராமரிப்போம் என்றால் சரி. காசோலையில் வாடிக்கையாளரின் கையொப்பத்தை நாங்கள் வேறு நபர்கள் மோசடி செய்து ஏற்படுத்தியிருக்க கூடாது என நாங்கள் காசோலையில் உள்ள கையெழுத்தை நாங்கள் பிரதானமாக சரிபார்ப்போம் என்றால் சரி. அந்த பதிவேட்டை பார்த்தால் காசோலையில் உள்ள கையொப்பம் ஆங்கிலத்தில் உள்ளது மாதிரி கையொப்பம் தமிழில் உள்ளது என குறிப்பிட்டிக்க வாய்ப்புள்ளது என்றால் சரி. வங்கி கணக்கு துவங்கும் படிவத்தில் பார்வையிட்டால் அவர் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்கிறாரா தமிழில் கையொப்பம் செய்கிறாரா எனத் தெரியவரும் என்றால் ஆம். வாடிக்கையாளர் அவர் கையொப்பத்தை வங்கி பரிவர்த்தனைக்கு அவர் மாற்றம் செய்ய விருப்பப்பட்டால் மனு செய்யலாம்.

எங்கள் வங்கியில் எதிரி அவர் வங்கி கணக்கில் தமிழில் கையொப்பம் செய்து பராமரித்து வந்ததை ஆங்கிலத்தில் கையொப்பம் செய்து பராமரிக்க மனு ஏதும் செய்தாரா என எங்கள் வங்கி பதிவேட்டை பார்த்தால் தெரியும். வங்கியில் authorisor என பணியை செய்து வரும் அலுவலர் அனுமதியின் பேரில் வாடிக்கையாளரின் வங்கி பரிவர்த்தனைக்களுக்கான கையொப்பம் மாறுதல் விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டபின் புதிய கையொப்பத்துடன் வங்கி பரிவர்த்தனை தொடரலாம். அந்த Authorisor பணி உதவி மேலாளருக்கு மேல் துணை மேலாளர் மற்றும் கிளை மேலாளர் ஆகியோரால் செய்யப்படும். அவ்வாறு உண்மையான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் எதிரி காசோலை பரிவர்த்தனைக்கான அவரது கையொப்பத்தை மாற்றியுள்ளரா என்ற விபரம் தெரியவரும் என்றால் ஆம்.

அரசு ஊழியருக்கு அவருடைய மாதாந்திர ஊதிய சிட்டையை கொண்டு அவருக்கு ரூ.10 லட்சம் வரை கடன் கொடுப்போம். அவருக்கு வேறு கடன்கள் உள்ளதா என்பதையும் அவரது Cibil score ஆகியவற்றை கொண்டு கடன் வழங்குவோம். அரசு ஊழியருக்கு கடன் வழங்குவதற்கு அவரது மாதாந்திர ஊதிய சிட்டை 3 மாத காலத்திற்கான வங்கி கணக்கு பட்டியல் மற்றும் அவருடைய ஆதார் அட்டை அவரது வசிப்பிட உறுதி செய்வதற்கான ஆவணம் ஆகியவற்றை பரீசிலிப்போம் என்றால் சரி. மேற்படி ஆவணங்களை அவருக்கு கடன் வழங்க போதுமானது என்றால் சரி. அந்த

ஆவணங்கள் தவிர அவரிடம் தனிப்பட்ட கடனிற்கு வேறு ஆவணங்கள் வாங்க மாட்டோம்.

நான் நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிட்ட எதிரியின் வங்கி கணக்கு துவங்கிய விண்ணப்பம் நகல் எடுத்து வரவும் அது எங்கள் வங்கியில் ஆண்டிற்கு ஒரு முறை ஆவணங்கள் அனைத்தையும் எங்கள் வங்கியில் ஆவணங்கள் பராமரிக்கும் இடத்திற்கு அனுப்பிவிடுவோம். ஆகையால் எதிரி வங்கி கணக்கு துவங்கிய விண்ணப்பம் தற்சமயம் எங்கள் கிளையில் இல்லை. அவகாசம் கொடுத்தால் அதனை பெற்று நீதிமன்றத்திற்கு எடுத்து வர இயலும்.

(சாட்சி எதிரியின் வங்கி கணக்கு விண்ணப்பபடிவம் எடுத்து வர கால அவகாசத்திற்கு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

9/2/24

நீதித்துறை விரைவு நடுவர்
திருவில்லிபுத்தூர்.